Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மலர் 18 | ஈரோடு, 19-5-1945 வைகாசி-மீ 6உ | இதழ் 32

## புரோகித உற்பத்தி

கோவில்கள் என்பவற்றில் விக்கிரகங்கள் உற்பத்தியைவிட புரோகிதத்வ உற்பத்தி மிகவும் முக்கியமாகும். புரோகிதனுடைய உற்பத்தி முற்கூறியதைவிட அதிக சக்தியையும், மதிப்பையும், முக்கியத்தையும் கடவுளுக்குக் கொடுக்கிறது. ஏன்? தான் வழிபடும், அல்லது காப்பாற்றும் கடவுளின் மேன்மையையும் பெருக்குவது புரோகிதனுக்குத்தான் (to the Priest) மிகவும் இன்றியமையாததாய் இருக்கிறது.

இதன் வகை இரண்டு. ஒன்று அரசனே வழிபடுவது போன்றது. (Quasi royol) தனித்தொழிற் புரோகிதம் மற்றொன்று. முன்னதைப் பற்றி கவனிப்போம். ஆப்பிரிக்க கிராமங்களில் தலைவன் இறந்த பின், அவன் குமாரனும், அவனுக்குப் பின் அந்த இடத்தை வகிப்பவனுமானவன் அவ்விறந்தானுக்குரிய நிவேதனங்களை எடுத்துச் சென்று அக்கடவுளை (இறந்தானை,) அணுகுகிறான். இக்கடவுளிடமிருந்து ஏதாவதொன்றை வேறு யாராகிலும் (இறந்தவனின் சொந்தக்காரரல்லாதார்) கேட்க விரும்பினால், அக்கடவுள்களின் நெருங்கிய உறவினரும், அவைகளின் நண்பனும் அவைகளின் பழக்கவழக்கங்களை அறிந்தவனும் ஆன தலைவன் மூலமாகத்தான் கேட்டறியவேண்டும். இம்மாதிரியான தலைவர்களேதான். பொதுவாகப் புரோகிதர்களானார்கள் (Priests). இவர்கள் குலத்தில் மேன்மக்கள் என்று கருதப்பட்டார்கள். மற்ற சாதாரண மக்களைவிட இவர்களும், இவர்களது குழந்தைகளும் அந்தச் கடவுளுக்குத் தனி உறவினர்கள் ஆகிவிடுகிறார்கள்: இத்தன்மைத்தான உறவு பல தேசங்களிலும் பரவி இருக்கிறது. பிறகு காலாவட்டத்தில் இம்மாதிரியான தலைவன்தான் அரசனும் புரோகிதனுமாக ஆகிவிடுவான்.

கூட்டுக் குழுமிடத்து முதன் முதலில் ஒரு சிறு கூட்டத்தினரின் அல்லது குடும்பத்தின் கடவுள் என்பது இறந்துபோனவர்களான சொந்த மூதாதைகளே. இங்கு வீட்டின் தலைவன் புரோகிதனாக இருந்து சடங்குகளை நடத்துகிறான். இவன்தான் இவனது மனைவிக்கும், குழந்தைகளுக்கும், சார்ந்தவர்களுக்கும் பிரதிநிதியாக இருந்து குடும்பக் கடவுளை அணுகுகிறான். இன்றும், ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும், மிக முக்கிய வீட்டுச் சடங்குகளை (The more restricted family-rites) பொருத்தமட்டிலுள்ள புரோகித கருமங்களைத்தானே வைத்துக்கொண்டிருக்கிறான். காடு பெருகப்பெருக, தலைவர்களின் வலிமை அதிகமாக ஆக, இந்தக் குடும்பத்தின் மூதாதைகள் கடவுள்களாகிவிடுகின்றன. இதற்கு அதன் நெருங்கிய உறவினர் அதாவது உயிருடன் இருக்கும் தலைவன் பிரதிநிதியாக இருக்கிறான். இங்ஙனமாகப் பல வழிகளில் புரோகிதன் அரசனாகி புரோகித வேலை அரசனுடைய வேலைகளுடன் அமைக்கப்பெற்றுவிடுகிறது.

தோழர் ப்ரேஸர் 'Frazer' தனது பத்தகத்தில் (The Golden Bough) குறிப்பிடுவதாவது: மன்னனின் பட்டமும் புரோகிதத்தொழிலும் ஆதி (ancient) இதாலியிலும், கிரீசிலும் சாதாரணமாக இருந்தது. உரோமிலும் மற்றுஞ் சில இதாலி நகரங்களிலும், 'தெய்வீக அரசன் அல்லது தைவ கரும விறைவன்' (Rex Sacrorum or Rex Sacrificulus என்றொரு புரோகிதனுக்குப் பெயரிருந்தது'. அவனது மனைவிக்குத் 'தைவ கரும இறைவி' என்று பெயர். ஏதேனிய ரிபப்ளிகிலும் இரண்டாம் நியாயாதிபதிக்கு அரசன் என்றும், அவன் மனைவிக்கு அரசி என்றும் பெயர். மேற்சொன்ன இருவரின் வேலைகளும் மத சம்பந்தமானது. உரோமில் இவ்வித அரசர்களை நீக்கிவிட்டால் அதற்குப் பதிலாக ஒரு புரோகிதனை (தெய்வீக அரசனை) வைப்பார்கள். இவன் முன்னிருந்த அரசர்கள் செய்துவந்த (மத சம்பந்த) கருமங்களைச் செய்வான். கிரேக்க நாட்டிலும் இம்மாதிரியான கொள்கைகள் (புரோகித அரசத்தன்மை) நிலவியதாகக் காணப்படுகிறது. சரித்திரக் காலத்தில் அரசாட்சியைக் கைக்கொண்டிருந்த ஸ்பார்ட்டாவை எடுத்துக்கொள்ளுவோம். அங்கே எல்லா நாட்டுச் சடங்குகளும் (All state sacrifices) கடவுளினிடமிருந்து வந்தவர்கள் (descend ants of the god) என்ற முறையில் அரசர்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. டியூடானிய அரசர்கள் ஆகி ஹத்தானிய நாட்களில் இந்த நிலையில் இருந்துகொண்டுதான் பெரும் புரோகிதார்க அதிகாரம் செய்துவந்தார்கள்......"

இம்மாதிரியான வழிகளில் புரோகிதத்வம் தோன்றினால் உலக வாழ்க்கைக்கும் (Temporal) மத வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் தெரிவதில்லை.

### இரண்டாவது வித புரோகிதத்துவம்

இனி இரண்டாவது விதமான புரோகிதத்வத்திற்கு அதாவது தனி மனிதர்களை பூஜை முதலியனசெய்ய வைக்கும் முறைக்குச் செல்வோம். இது ஆதியில் அவ்வளவு மேன்மையுற்றதாயில்லாமல் போயினும் பிற்காலத்தில் மேலோங்கும் தன்மையைத் தன்னகத்தே கொண்டதாக இருக்கிறது.

அரசனே புரோகிதனாகவும் கடவுளின் பின் வந்தவனாகவும் இருந்தால் (பெரு, எகிப்து போல) அவனது சக்தியானது அவன் வணங்கும் கடவுளின் சக்தியை மறைத்துக் குறைத்துவிடுகிறது. ஆனால் புரோகிதத்தைத் தனியாகப் பிரித்துவிட்டு தனி (அரசல்லாத) புரோகிதர்கள் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளைத் தங்கள் கைக்குக் கொண்டுவிட்டால், அவைகளின் சக்தி அரசர்களினதைவிட அதிகமாக எழுவதைக் காணலாம். இந்த புரோகிதர்கள்தான் வலிமை பெற்றப் பின் கொலையுண்ட குருக்களின் (Arch Bishops) பெருமிதமான கோவிலின் முன் பிரதான கோவிலின் முன் வணக்கஞ் செய்யும் பேரரசர்களும் கட்டளை பிறப்பிக்கும் போப்புகள் (இதின்

தது சங்கராச்சாரிகள் அல்லது உலக குருக்கள்) ஆவதைக் காண்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட தலைவனின் அல்லது வீரனின் சமாதிக்கு வேண்டிய பூஜை முதலியது செய்ய தனியே ஒருவனை அமர்த்துதல் வழக்கம். இம்மாதிரியான புரோகிதோற்பத்திக்கு எகிப்து நல்ல உதாரணம் கூறுகிறது.

பெனிஹஸன், சக்காரா என்ற இடங்களில் இருக்கும் குகைபோன்ற சமாதிகளிலுள்ள வாசற்படி மேல்பாகத்தில் (Lintel) அதனுள் இருக்கும் மனிதனின் பெயர், பட்டம் முதலியன பொறிக்கப்பெற்றிருக்கின்றன. அது (இறந்த மனிதன்) தனது நமக்கடனைப் பெற்றுக்கொள்ளும் என்ற பக்தி வழியான நம்பிக்கையுண்டாகிறது. அதற்குச் செலுத்தவேண்டிய கடன்களின் (Offerings) பட்டியும் அதிலேயே எழுதப் பெற்றிருக்கும். இதில் நாம் காணவேண்டியதென்ன? புரோகிதனோ அல்லது வேலையாளோ, இம்மாதிரியான கடன்கள் சரிவர நடைபெறச் செய்ய அமர்த்தப்படுகிறான். புரோகிதனுடைய வயிற்றுப்பிழைப்பிற்காகவும், சமாதிக்குரிய படையல் முதலியனவற்றின் செலவினுக்காகவும் சொத்துக்கள் ஒதுக்கப்படுகின்றன. இந்தப் புரோகிதர்கள் வம்ச பரம்பரையாக அவ்வேலையை மேற்கொள்ளுகின்றனர். இதனால் அச்சடங்குகள் நிற்காமல் நடைபெற வழியுண்டாகிறது. ஆகவே பழைய அரசாட்சியில் இறந்த ஒருவன் 18-வது 19-வது அரச பரம்பரையிலும் தனது நமக்கடனை (ஆனால் கடவுள் என்ற பெயரால்) பெறுகிறான்.

மேற்சொன்ன உருசிகரமான குறிப்பு நன்றாய் அறிந்து கொள்ளக்கூடிய தொன்றாக இருப்பதால் குறிப்பிடப்பட்டது. இத்தகைய உற்பத்தி எல்லா இடங்களிலும் சிறிய அளவிலாவது பரவியிருக்கிறது. இப்படி கோயில் பூஜைக்காக முதன் முதலில் அமர்த்தப்பெற்ற ஆட்கள் (Attendants) பின்னர் கோயிலில் வசிப்பவனும் கண்ணால் காண முடியாதவனும் ஆன ஒருவனின் (ஒரு கடவுளின்) நடையுடை வழக்கத்தை யறிந்த புரோகிதனாகிவிடுகிறான். கொஞ்சங் கொஞ்சமாக சடங்குகள் அதிகரிக்கின்றன. வழக்கமும் ஆசாரமும் சீர்திருத்தம் பெறுகின்றன. தேவ ஐதீகத்திற்கு (Divine Traditions) ஓர் சேமக் களஞ்சியமாகப் புரோகிதன் ஆகிவிடுகிறான். இவனுக்கு மட்டுந்தான் எப்படி கடவுளை அணுகுவது என்பது தெரியும். கடவுளின் கோபத்திற்கும் மகிழ்ச்சிக்கும் உரிய மறைமுகக் குறிகள், அவனுக்கு (புரோகிதனுக்கு) மட்டுந்தான் தெரியும். கடவுளுக்கும் அதை வணங்குபவனுக்கும் தரகர் (Intemediaries) என்ற முறையில் அவர்கள் [புரோகிதர்கள்] பாதி தெய்வீகவான்களாகிறார்கள் [இதனால்தான் நாம் அவர்களை இரு பிறப்பாளர்கள் என்று கூறுகிறோம்!]

இந்த புரோகிதர்களில் வழிபடுவோன் (Votary) தன் நாயகனை நியாயமாக நெருங்கமுடியாது. இதனால்தான் அவர்கள் ஆதியில் உண்டான காரணத்தைவிட அதிக முக்கிய நிலைமைக்கு வந்தார்கள். புரோகிதம் இந்த நிலைமையில்தான் நடைமுறைக்கு வந்தது. கடவுளையும் அது வாழும் கோயிலையும் மதிப்பில் அதிகரித்துக்கொண்டே தங்கள் உத்தியோகத்தினதும், சடங்குகளினதும்ஆன மதிப்பையும் உயர்த்திக் கொண்டு செல்லுகிறார்கள் புரோகிதர்கள். [இந்தத் தொழிலை கடைபிடித்து வந்தவர்கள் தான் இந்தமதத்தில் மலிந்துகிடக்கும் புரோகிதர்களும் குருக்களும் என்றால் அது மிகையாகாதென்பது கண்கூடு)

புரோகிதத்வம் தோன்றியதற்கு மற்றொரு காரணமும் சுருக்கமாகக் கூறலாம். ஆதி எகிப்தில் புரோகிதர்கள் தான் கல்விகற்ற வகுப்பினர். மத்திய கால ஐரோப்பாவிலும் புரோகிதர்கள் தான்படித்த வகுப்பினராய் இருந்தனர். இவர்கள் படம் எழுதுதலும் அதற்குரிய குறியீடுகளை அமைத்தலும் ஆன எழுச்சிக்குக் காரணமாயிருந்தனர். சில தெய்வீக இரகசியங்கள் என்பவை புரோகிதர்களுக்குமட்டுந்தான் தெரிந்திருந்தது. இவைகளை எழுதிச் சொந்த சொத்தாக புரோகிதர்கள் வைத்துக்கொள்ளுகின்றனர். இவ்வாறு மத சம்பந்தத்திற்கும் உலக சம்பந்தத்திற்குமுள்ள நூல்களில் வித்தியாசங்கள் ஏற்பட்டவுடன் புரோகிதத்திற்கும் இலௌகீகத்திற்குமுள்ள இடைவெளி அதிகரிக்கின்றது. சாதாரண மனிதர்களுக்குக் காட்டக்கூடாதென்று சொல்லி, அவ்வறிவின் சாவியைத் தங்களுடைய சொந்த சொத்தாக்கிக்கொண்டனர். வேத புத்தகங்கள் (மறைகள்) இதே நிலைமையில்தான் இருக்கின்றன. (அதாவது பிரோகிதர்கள் தவிர்த்த மற்றவர்கள் படிக்கக்கூடாத நிலைமையில் இருக்கின்றன இதன் காப்பாளர்களும் பிரதிநிதிகளும் (exponents) புரோகிதர்களே) இன்னமும் கோயில்களின் சித்திர வேலைப்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க, உருவத்தின் செலவும் செருக்கும் அதிகமாக ஆக புரோகிதனது ஆடையும் தனிமுறையினையுடைதாகிவிட்டது. "பகுத்தறிவு"

---

கோவில்பட்டித் தாலுகா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தாரால் நாலாட்டின்புத்தூரில் 22-4-45-ந் தேதி மாலை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் தோழர் சா. தங்கையா தலைமையில் நிறுவப் பெற்றது. தோழர்கள் பொன்னையா, எஸ். எஸ். அய்யாப் பிள்ளை, முத்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

## ஈரோட்டில் மாணவர் பயிற்சி

முதலாம் 4-5-45-ந் தேதி காலை 6-மணிக்கு பெரியார் இராமசாமி அவர்கள் தலைமையில் திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாச்சலம் அவர்களால் ஆரம்பம் செய்யப்பட்டது. பெரியார் அவர்கள் மாணவர்களுக்குச் சில அறிவுரை கூறிய பின் "மாணவர்களும் நம் இயக்கமும்" என்பது குறித்து வேதாசலம் அவர்கள் சொற்பொழிவாற்றி ஆரம்பித்துவைத்தார்கள்.

மாலை 3 மணிக்கு மேல் பெரியார் அவர்கள் தலைமையில் வேதாச்சலம் அவர்களும், எ. பி. சனார்த்தனமும் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார்கள். பெரியார் அவர்களின் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிவுற்றது.

மறுநாள் 5-5-45-ல் காலை 6 மணிக்கு தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் தோழர் இரா. இளம்வழுதி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். பின் எல்லா மாணவர்களுக்கும் சொற்பொழிவு சோதனை நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு மீண்டும் தோழர் தி. பொ. வேதாச்சலம் அவர்கள் பயிற்சியளிக்க, தோழர் என். தவமணி இராசன் நன்றிகூற முடிவுற்றது.

மறுநாள் 6-5-45-ல் காலை மாநாட்டிற்குப் பின் இடைவேளையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது அனுபவத்தையொட்டி கிராமங்களில் சுற்றுப்பிரயாண பிரச்சாரத்துக்குச் செல்லும் மாணவர்கள் நடந்து கொள்ளவேண்டியதைப் பற்றி வெகு தெளிவாக, அழகாக எடுத்துக் கூறினார்கள். தலைவர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நன்றி கூறலுடன் பயிற்சி முடிவுற்றது.

## பெண்மகவு பெற்றார்

சென்னை தோழர் எ. எஸ். ராமன் அவர்கள் துணைவியார் தோழர் ராஜம்மாள் ஒரு பெண் மகவு பெற்று தாயும் சேயும் சுகமாக உள்ளனர்.

## அநுதாபம்

நாகை திராவிடர் நடிகர் கழக ஆர்கனைசரும், தன்னுணர்வு இயக்க சொற்பொழிவாளருமான நிரவி தோழர் கோ. இரத்தினவேலு அவர்களின் சகோதரர் நாராயணசாமி அவர்கள் சிறிது தினமாக நோய்வாய்ப்பட்டு 30-4-45 திங்கட்கிழமை காலை காலஞ்சென்றார்கள். தம்பியை பிரிந்து வருந்தும் தோழர் அவர்களுக்கும், அன்னாரின் உற்றார் உறவினர்களுக்கும் காரைத் திராவிடர் கழக அபிமானிகளின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தோழர் காரைசிவம் தெரிவிக்கிறார்.

# இந்து மதம்

(இது நாம் சொல்வதல்ல, ஜஸ்டிஸ் கட்சிக்கு பொப்பிலிராஜா தலைவராக இருந்த காலத்திலோ அல்லது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைவராக இருக்கிற காலத்திலோ எழுதப்பட்டதுமல்ல, பனகல் ராஜா அவர்கள் தலைவராகவும், சர் பி. டி. ராஜன் அவர்கள் சேர்மனாகவும் இருந்த காலத்தில் அதாவது 1918 ஜூன் 16ஆம் தேதி ஜஸ்டிஸ் கட்சியின் 'அபிஷியல் ஆர்கனா'ன தோழர் ஜே. என். கண்ணப்பர் அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'திராவிடன்' பத்திரிகையின் தலையங்கம் ஆகும் இது. இதை ஏற்கனவே, 'குடி அரசு' 4வது மாலை, 9வது மலர் 13 ஆம் பக்கத்தில் அதாவது 26-6-28ந்தேதி வெளியீட்டில் 'இந்து மதம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆ-ர்)

இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும் அது பார்ப்பனர்கள் தங்கள் உயர்வுக்கும் வயிற்றுப்பிழைப்புக்குமாக மூடர்களுக்கு ஏற்ற விதமாக பொய்யையும் புளுகையும் எழுதிவைத்து அதையே மதம் என்றும், வேதம் என்றும், சாஸ்திரம் என்றும் பெயர் வைத்து நம்மில் சில அயோக்கியர்களையும் அறிவிலிகளையும் இழிதன்மையால் சுவாதீனம் செய்து அவர்களைக் கொண்டே அதைப் பிரசாரமும் செய்விக்கச்செய்து, அதையே கலையாகவும், கவியாகவும்செய்வித்துவிட்டார்கள் என்றும், அதனால் இப்போது அவைகள் எங்குபார்த்தாலும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும் தொழிலாகவும் லாபமாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும், இதன் பலனாக நாட்டில் உள்ள மக்கள் பெரும்பாலும் அறிவிழந்து, மானமிழந்து, சொரணையற்று வாழும்படியாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும் பலதடவை எழுதியிருக்கிறோம்.

அப்படியிருந்தும் இம்மாதிரி இந்துமதத்தைப்பற்றி வக்காலத்து வாங்கிப்பேசும் எந்த யோக்கியனோ இந்து மதம் என்றால் என்ன? அதன் தலைவர் யார்? அதன் ஆதாரம் எது? அது எப்போது ஏற்பட்டது?—என்பன போன்றவைகளை இன்றுவரை வெளியிட வந்தவர்கள் அல்ல. இந்துமதம் போச்சு! இந்து மதம் போச்சு!! என்று மாயாஜாலம் செய்யும் அறிவிலிகள் ஏனையோர் மற்ற மதங்கள் என்பவைகளுக்கு பொருள் சொல்லப்படுவது போல இந்து மதம் என்பதற்கு பொருள் என்ன? என்பதை சொல்லக்கூடியவர்களுமல்ல. அல்லது இந்துமதம் என்கின்ற வார்த்தையாவது எந்த "வேதத்திலோ" "சாஸ்திரத்திலோ" "புராணத்திலோ" 'கலைகளிலோ', கவிகளிலோ! இருப்பதாகவாவது, காட்ட முன்வந்தவர்களுமல்ல. இந்த நிலையில் இருந்துகொண்டு மக்களின் அறிவீனத்தையும் மூடபக்தியையும் தங்களுக்கு ஆதாரவாய் வைத்துக்கொண்டு அயோக்கியர்களும், அறிவிலிகளும், சோம்பேறிகளும் தங்களுக்கு அனுகூலமாக தோட்டதற்கெல்லாம் இந்து மதம் போச்சு! இந்து மதம் போச்சு!! என்று சொல்லி மக்களை ஏய்த்துக்கொண்டு வருகின்றார்கள். இதனால் மக்கள் வாழ்க்கை அவர்களது பொருளும் அறிவும், நேரமும் எவ்வளவு வீணாகி வருகின்றது என்பதை கவனித்தால் இப்போலி மதத்தால் நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள கெடுதி எவ்வளவு என்பது விளங்காமல் போகாது. தென்னாட்டில் மாத்திரம் இந்துமத தேவாலயங்கள் என்பதின் பேரால், உற்சவங்கள் என்பதின் பேரால், மடங்கள் என்பதின் பேரால் அதை மதமாகக் கொண்டிருக்கும் மக்களின் பணம் வருஷத்தில் சுமார் 10-கோடி ரூபாய்வரை வீணாகின்றதை இந்து மதத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசும் யாராவது உணர்ந்தார்களா என்று கேட்கின்றோம். ஒவ்வொரு கோவிலை எடுத்துக் கொண்டால் 4-லட்சம், 5-லட்சம், 10-லட்சம் 20-லட்சம், ரூபாய் வரும்படி உள்ளவைகளாக இருக்கின்ற விபரம் யாவரும் அறிந்ததே. அந்த மதத்தைச்சேர்ந்த மக்களின் யோக்கியதையை எடுத்துக் கொண்டால் ஆண்களில் 100க்கு 93-பேரும் பெண்களில் 100க்கு 99-பேரும் கையெழுத்துக்கூடபோடத் தெரியாத அவ்வளவு தற்குறிகளாய்இருக்கின்றார்கள் என்பதும் யாவருக்கும் தெரிந்ததே. இம்மாதிரி இந்நாட்டு ஏழை மக்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வம் வருடாவருடம் 10-கோடிக்கணக்காக வீணாவதும் 100க்கு 99பேர் படிக்காத தற்குறிகளாக இருப்பதும் அர்த்தமற்ற—கொள்கையற்ற—இந்து மதத்தினாலே அல்லவா என்று கேட்கிறோம். இந்து மதத்திற்கு வக்காலத்து பேசும் யோக்கியர்கள் யாராவது சமாதானம் சொல்லுவார்களா? என்று கேட்கின்றோம். ராமனைக் குற்றம் சொன்னதினாலும் தங்களுடைய மதமோ, தெய்வமோ, மானமோ குற்றம் சொல்லப்படுவதாகக் கருதுபவர்கள் அக்குற்றங்கள் எங்கிருந்து உண்டாகப்பட்டன என்பதை உணர்ந்தார்களா என்று தான் கேட்கின்றோம். யோக்கியமும் ஆண்மையும் சுத்த ரத்த ஓட்டமும் உள்ளவர்களானால் அக்குற்றங்கள் உண்மையா அல்லவா என்பதையும் இந்துமத

மிராண்டா—கஜேந்திரன்
வாழ்க்கை ஒப்பந்தம்

*

பெரியாரின் முன்னவர், வைத்திய வள்ளல்
ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களது மகள்
மிராண்டா B. A.,

திருப்பத்தூர் வக்கீல்
தோழர் G. சாமிநாயுடு B. A., B. L., அவர்களது மகன்
கஜேந்திரன் B. A.,

ஆகிய இருவருக்கும்,
24-5-45 வியாழக்கிழமை காலை 9-மணிக்கு
(வ. ஆ) திருப்பத்தூர் வக்கீல் தோழர்
ஜி. சாமிநாயுடு அவர்கள் இல்லத்தில்
வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

த்தைச்சேர்ந்ததென்று சொல்லப்படும் ஆதாரங்களில் இந்து மதத்தைச் சேர்ந்த கடவுள்கள் என்று சொல்லப்படுபவர்களைப்பற்றி சரணுவதோவா அல்லவா என்பதையும், வெளியாக்கி விவாதம் தொடர்வார்கள். அப்படிக்கில்லாமல் போக்கிரித்தனமாய் அன்னியர்கள் இதில் குற்றம் சுமத்துவது யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் செய்கையாகுமா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், நாமும் நமது பத்திரிகையும் நாஸ்திகப் பிரசாரம் செய்கின்றதாக பல அயோக்கியர்கள் எழுதியும் உளறியும் திரிகின்றார்கள். இதைக் கவனிக்கும்போது நாம் கடிந்து சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில், நாம் நாஸ்திகப் பிரசாரம் செய்வதாக எழுதுகிறவர்களும், குரைக்கின்றவர்களும் நாஸ்திகம் என்றால் என்ன என்பதைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட கெடுதி என்ன என்பதைப் பற்றியும் சொல்ல முன்வந்து பிறகு அக்குற்றத்தை நம் மீது சுமத்தினால் அதை மனிதத்தன்மையாகக் கொள்ளலாம். அப்படிக்கின்றி நாஸ்திகம் இன்னதென்றே அறிவிக்காமல், மூட ஜனங்களுக்கு நாஸ்திக என்கின்ற வார்த்தையில் ஒருவித வெறுப்பு இருப்பதாக உணர்ந்து, அதை உபயோகித்துக்கொள்வதன் மூலம் நம்மீது அம்மக்களுக்கு துவேஷம் உண்டாகட்டும் என்கின்ற அயோக்கியத்தனமான எண்ணத்துடன் பல மடையர்கள் அடிக்கடி எழுதினால் யார்தான் சும்மா இருந்துகொண்டிருக்க முடியும் என்றுதான் கேட்கின்றோம்.

நாம் ஏதோ இவ்விஷயத்தில் சற்று கடினமான பதம் உபயோகிப்பதாக நம் வாசகர்கள் கருதலாம். என் செய்வது? நிவர்த்தி இல்லாததால் உபயோகித்தே தீரவேண்டியதாயிற்று என்பதை நமது வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஏனெனில் இதைப்பற்றி பல தடவைகளில் நாம் சமாதானம் எழுதி இருக்கின்றோம். அவை கொஞ்சமும் அவ்விலக்கினங்களுக்குப் படும்படியாகச் செய்ய முடியவில்லை. மறுபடியும் நாஸ்திகம் என்றும் சிலையைத் திட்டினான் என்றும், மற்றதைத் திட்டினான் என்றுமே எழுதியும் பேசியும் வருகிறார்கள். ஆதலால் இவர்களின் உண்மை யோக்கியதையை வெளியிட்டே தீரவேண்டியதாய்விட்டதே ஒழிய வேறில்லை.

இனிமேலாவது இந்து மதத்திற்கோ மற்றும் எதற்கோ வக்காலத்துப் பேச வருகிறவர்கள் மக்களின் அறியாமையைத் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக்கொள்ளாமல் நாணயமான முறையில் வக்காலத்து வாங்கிப் பேச வரட்டும் என்றே எதிர்பார்க்கிறோம். அன்றியும் நாஸ்திகம் என்று பேச வருபவர்களும் அதோ லாவது நாஸ்திகம் என்பதை எடுத்துக்காட்டி வக்காலத்து பேச முன்வரட்டும் என்றே எதிர்பார்க்கின்றோம். அதைவிட்டு விட்டு இம்மாதிரி அயோக்கியத்தனமான வழியில் பிரவேசிப்பது மிருகத்தனமும் காலித்தனம் என்றே சொல்லுவோம். இப்படி எத்தனை பேர் புறப்பட்டாலும் நாம் கலங்கப் போவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்படித்தான் "ஜஸ்டிஸ்" கட்சி என்பதையும் "திராவிடன்" என்பதையும் ஒரு காலத்தில் மக்களின் அறியாமையை உபயோகித்துக் கொண்டு பல அயோக்கியர்கள், பொது மக்கள் அதன் மீது வெறுப்படையும்படிச் செய்து, அதனால் வயிறு வளர்த்து வந்தார்கள். ஆனால் அது எதற்கும் அஞ்சாமல் உறுதியுடன் நின்று உழைத்து வந்ததின் பயனாக இன்று மக்கள் உண்மை உணரும்படி செய்து புரட்டர்களின் யோக்கியதையையும் வெளியாக்கி அவர்களையெல்லாம் மூலையில் உட்கார வைத்துவிட்டது என்பதை யாரே மறுக்கவல்லவர்? எனவே ஒருகாலத்தில் பாமர மக்கள் ஏமாற்றப்பட்டாலும் ஒரு காலத்தில் உண்மை அறிந்தே தீருவார்கள் என்பது நமது உறுதி.

## திருமணங்கள்

ஈரோடு தோழர் எம். சிக்கய்ய நாயக்கர் அவர்களின் மைத்துனர் கே. கோவிந்தராஜுலுவுக்கும், தோழர் என். கரிவரதசாமி அவர்களின் பேத்தியும் தோழர் கே. கிருஷ்ணசாமி அவர்களின் மகளுமான கண்ணாகிக்கும் 24-5-45 காலை 9 மணிக்கு மேல் திருமணம் நடைபெறும்.

* *

திருச்சி கருணாநிதிபார்க்கில் தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் 21-5-45 ஜெ. என். ராமானுஜம் பி. ஏ., பி. எல்., அவர்களால் தோழர்கள் பி. நாராயணனுக்கும் செல்லம்மாளுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திவைக்கப்பெறும். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* *

குளூரில் தோழர்கள் எம். கந்தசாமிக்கும் நாகம்மைக்கும் 27-5-45-ந் தேதி தோழர் எஸ். ஆர். சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் திருமணம் நடத்திவைக்கப்படும்.

## கல்வி மாநாடு

தென்னிந்திய பார்க்கவ குல 5-வது மாகாணக் கல்வி மாநாடு திருவாரூரில் 27-5-45ந் தேதி தோழர் சி. இராஜகோபாலுடையார் பி. ஏ., பி. எல்., தலைமையில் நடைபெறும்.

## ஏற்காட்டில் வெற்றி விழா

14-5-45ந் தேதி ஏற்காட்டில் வெற்றிவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஊர் முழுவதும் நன்றாக அணி செய்விக்கப்பெற்று மேளத்துடன் ஊர்வலம் வந்து ஏழைகளுக்கும் படைவீரர் வீட்டு மக்களுக்கும் சோறும், அரிசியும் அளித்து மாலையில் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஏற்காடு தாசில்தார் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களால் வெற்றிச் சொற்பொழிவாற்றப்பட்டது. விழாவில் பள்ளிப் பிள்ளைகளுக்கு பந்தயப் பரிசளிக்கப்பட்டதுடன் ஐரோப்பிய ஆண் பெண் பலர் கலந்துகொண்டார்கள். தோழர் கந்தசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் புத்தகசாலைக் கட்டிடத்தில் ஐரோப்பியர்களின் கூட்டம் ஒன்று கூட்டி பல ஐரோப்பியர் சொற்பொழிவாற்றினார்கள்.

## திருவள்ளுவர் நினைவு நாள்

சேலம், குகை, திருக்குறள் கழகத்தின் ஆதரவில் திருவள்ளுவர் நினைவுநாள் 4-ஆம் ஆண்டுவிழா 26-5-45ந் தேதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் தோழர் டாக்டர் ஏ. சிதம்பரநாத செட்டியார் M.A.Ph.D. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## கல்லிடைக்குறிச்சியில் "போர்வாள்"

கல்லிடைக்குறிச்சி நியூ சந்திரவிலாஸ் தியேட்டரில் 9-4-45ந்தேதி சேர்மாதேவி சப்கலெக்டர் தலைமையில் தோழர் எம். ஆர். ராதா அவர்களின் "திராவிட புதுமலர்ச்சி நாடக சபையாரால்" லக்ஷ்மிகாந்தம் நாடகம் ஆரம்பவிழா நடைபெற்றது. ஷியூர் திராவிடர் கழக காரியதரிசி தோழர் சி. கணபதியால் தோழர் ராதாவுக்கு ஒரு வரவேற்பு வாசித்தளிக்கப்பட்டது. 6-5-45-ல் "போர்வாள்" நாடகம் நடைபெற்றது. தோழர் பாவலர் பாலசுந்தரம் சீர்திருத்த நாடகத்தின் அவசியம் என்பது பற்றி பேசினார்.

ரோஜா முத்தையா

# மாவட்டந்தோறும் மாணவத்தோழர்கள்

திருநெல்வேலி: தோழர்கள் புலவர் கா. மு. மாணிக்கம், அண்ணாமலை நகர் கி. தியாகராசன், ச. இராமசாமி ஆகியவர்கள் 8-5-45 முதல் அரந்தாங்கிகுடி வட்டாரத்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு 12-ந் தேதி முதல் திருநெல்வேலி பகுதியில் பிரசாரம் செய்து வருகிறார்கள். 19-ல் கல்லிடைக்குறிச்சி, 20-ல் பேட்டை ஆகிய இடங்களில் சொற்பொழிவாற்றுவார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் மேலும் கூட்டங்கள் நடத்த விரும்புவோர் உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ கடித மூலமோ அறிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

தோழர் கே. எம். பிரமநாயகம் பிள்ளை, குமார விலாஸ் காபி கிளப், வடக்கு ரத வீதி, திருநெல்வேலி.

இராமநாதபுரம்: இம்மாவட்டத்தில் கூட்டங்கள் நிகழ்த்த விரும்பும்தோழர்கள் தங்களாலியன்றஅளவு அதிகமான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்துகொண்டு எமக்கெழுதினால் இம்மாத இறுதியில் பிரசாரத்துக்காக மாணவர் குழுவினை அனுப்பிவைக்கப் பெறும்.

மதுரை: தோழர்கள் ஈ. வெ. கி சம்பத், து. பெரியசாமி, ஹமீபல்லா, ராமாநுஜம் ஆகிய தோழர்கள் கீழ்க்கண்ட முறையில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள்.

20-5-45 மதுரை
21- ஓய்வு (மதுரை)
22- சோழவந்தான்
23- வாடிப்பட்டி
24- சின்னாளப்பட்டி
25- கல்வார்பட்டி
26- திண்டுக்கல்
27- நிலக்கோட்டை.

மேலும் கூட்டம் அமைக்க விழைவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக. தோழர் சி. முத்திருளாண்டி, செயலாளர் திராவிடர் கழகம், 55-D புட்டுதோப்பு வீதி, மதுரை.

திருச்சி: தோழர்கள் புலவர் பி. குழந்தையா, சப்பையா, இராமையா, இதயத்துல்லா ஆகியோர் சுற்றுப்பிரயாணம் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

20-5-45 மண்ணச்சநல்லூர்
21- பொன்மலை

குளித்தலை, கரூர், கீழவெளியூர் முதலிய இடங்களில் கூட்டங்கள் நிகழும். இதர ஊர்களில் கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே எழுதவும்.

தோழர் அண்ணாமலை, செயலாளர், நாகம்மையார் திராவிடர் கழகம், தெப்பக்குளம், திருச்சி.

சேலம்: தோழர்கள் இளம்வழுதி, புலவர் நன்னன், இரா. வில்லாளன் ஆகிய தோழர்கள் நாமக்கல், திருச்செங்கோடு, சேலம் முதலிய தாலுகாக்களில் பிரசாரம் செய்து வருகின்றார்கள். ஆங்காங்குள்ள தோழர்கள் அதிகமான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து அடியிற்கண்ட முகவரிக்கு எழுதவும்.

தோழர் எம். எல். தமிழ்மணி, செயலாளர், திராவிடர் கழகம், செவ்வாய்ப் பேட்டை, சேலம்.

கோயமுத்தூர்: தோழர்கள் எஸ் தவமணி இராசன், புலவர் வீரவாகு, ஈ. வெ. கி. செல்வன், அப்துல் வகாபு, கோபி ராஜு ஆகியோர் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

19-5-45 சென்னிமலை
20- கொடுமுடி
21- ஆனைமலை
22- பொள்ளாச்சி
23- உடுமலை
24- தாராபுரம்
25, 26- திருப்பூர்

தஞ்சாவூர்: [நாகை, நன்னிலம், திருத்துறைப்பூண்டி தாலுக்காக்கள்]

19-5-45 காரைக்கால்
20- தரங்கம்பாடி
21- பொறையார்
22- தில்லையாடி
23- திருக்கணாச்சேரி
24- திருத்துறைப்பூண்டி
25- தாணிக்கோட்டகம்
26- தகட்டூர்
27- கரியாபட்டணம்.

மேற்படி கூட்டங்களில் தோழர்கள் புலவர் க. ச. மணியம், ப. வெற்பரசன், எஸ். சுந்தரமூர்த்தி, ப. திருஞான சம்பந்தம் ஆகியோர் கலந்துகொள்வர். மேலும் கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

தோழர் வி. எஸ். பி. யாகூப், C/o ஹாஜி பீர், ஜவுளிக்கடை, கடைத்தெரு திருத்துறைப்பூண்டி.

(தஞ்சை, பட்டுக்கோட்டை, மாயவரம் பகுதிகள்):

தோழர்கள் து.மா. பெரியசாமி, அரங்கண்ணல் ஆகியோர் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

19-5-45 தஞ்சை
20- மாரியம்மன்கோயில்
21- திருவையாறு
22- பூதலூர்
23- கண்டியூர்

இப்பகுதிகளில் கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் அடியிலுள்ள முகவரிக்கு எழுதவும்.

தோழர் என். எஸ். சண்முகவடிவேல் தஞ்சைத் திராவிட வாலிபர் கழகம், கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர்.

தென்னாற்காடு: கடலூர், விழுப்புரம், திண்டிவனம், அகலூர்பேட்டை ஆகிய பகுதிகளில் தோழர் ஆ. திராவிடமணி மேற்பார்வையில் புலவர் விண்ணரசனார், தோழர் இளவழகன் ஆகியோர் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். இப்பகுதிகளில் கூட்டம் அமைக்க விழைவோர் அடியிற்கண்ட முகவரிக்கு எழுதுக.

தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., திராவிடர் கழகம், கடலூர் O. T.

விருத்தாசலம், ஜெயங்கொண்டம் பகுதிகளில் தோழர் சி. முனுசாமி மேற்பார்வையில் புலவர் இரா. எழில்நிலவன் (டையார் தலைவியார்) தோழர் சிவபாக்கியம் அம்மையார், தோழர்கள் வீரமணி, ராசலிங்கம், கலியபெருமாள் ஆகியோர் கீழ்க்கண்ட விபரப்படி பிரசாரம் செய்கிறார்கள்.

19-5-45 முட்டம்குடி
20- சன்னாசிநல்லூர்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)


மேற்குப் போர்முனையில் அடைந்த வெற்றிக்கு நன்றி செலுத்துமுகத்தான்

★

(துருப்புகளின் நலன்களுக்கு என்ற தலைப்பில்)

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு மீண்டும் பணம் கொடுத்து

★

கிழக்குப் போர்முனையிலும் விரைவில் வெற்றிகாண உதவுங்கள்.

குடி அரசு

1945-ஆம் மே-மீ 19-உ

# போலி மாநாடு

சர் ஷண்முகம் செட்டியார் சென்னையில் 7-5-45-ல் விக்டோரியா மண்டபத்தில் கூடிய எஸ். ஐ. எல். எப். மாநாடு என்கின்ற ஒரு போலி மாநாட்டில் அதிலும் 300-க்கு கீழ்ப்பட்ட மக்கள் கொண்ட சிறு கூட்டத்தின் தலைமைப் பிரசங்கமாகப் பேசிய பேச்சுக்கள் சில பத்திரிக்கைகளில் வந்திருக்கின்றன. அவற்றைப் பார்க்கும் போது சர் செட்டியார் அவர்கள் நமது சமுதாயத்தை விட்டே விலகிவிடத் தீர்மானித்துவிட்டதாகவே தெரிகிறது. அதோடு அவரது முன்பின் பேச்சுக்களைப் பற்றி அவர் சிறிதும் கவலையோ லட்சியமோ கொண்டதாகவே தெரியவில்லை.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அப்பேச்சின் போக்கிலிருந்து அவர் இந்த மாகாணத்தில் தனக்கு ஏதாவது மரியாதையோ பிரதிநிதித்துவமோ கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையை அடியோடு இழந்து வெளி மாகாண மனிதராகத் தீர்மானித்துக் கொண்டுவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். வெளிமாகாண சமஸ்தானங்கள் இந்திய அரசாங்கம் ஆகியவைகளில் தனக்கு ஏதாவது ச்சேன்ஸ் கிடைத்தால்தான் உண்டு என்கின்ற நிலைமைக்கு வந்துவிட்டார். அதற்கும் ஆரியர் தயவு இல்லாவிட்டால் முடியாது என்று கருதி ஆரியருக்கு நல்ல பிள்ளையாகத் துணிந்து எதையும் தியாகம் செய்ய முடிவு செய்து அவர்களோடு ஒப்பந்தமும் செய்து கொண்டார் என்றும் கருத வேண்டி இருக்கிறது.

திராவிடநாடு, திராவிடர், அல்லது தமிழ்நாடு, தமிழர் என்ற உணர்ச்சியை அவர் தனது உள்ளத்தில் இருந்து தூக்கி எறிந்தேவிட்டார். தானாக வந்தால் தனக்கு ஒரு பங்கு வரட்டும் என்பதற்கு ஆகவோ என்னவோ பார்ப்பனரல்லாதார் என்கின்ற வார்த்தையை மாத்திரம் அதுவும் சர்வஜாக்கிரதையாக "தென் இந்திய பார்ப்பனரல்லாதார்" என்று பேசி இருக்கிறார்.

ஆனால் பார்ப்பனருக்கும் தனக்கும் பழக்கவழக்கம், கலை ஆச்சாரம், அனுஷ்டானம், கொள்கை ஆகியவைகளில் என்ன வித்தியாசம் என்று ஜாடைகூட காட்டவில்லை. காட்டினால் ஆரியப் பத்திரிகைகள் விஷமம் செய்துவிடுமேயென்று கருதி உடனே இந்து மதமே தனது மதம் என்றும் அதைக் குறை கூறுகின்றவர்களிடம் தாம் சம்மந்தமே வைத்துக் கொள்ள முடியாது என்றும் சொல்லத் துணிந்துவிட்டார். இப்படிப்பட்ட இவர் தனக்கும் பார்ப்பனருக்கும் வித்தியாசம்காட்ட எப்படி முன் வர முடியும்? சர் ஷண்முகத்தைத் தலைவராக்க அட்வான்ஸ் பெற்று தவம் கிடந்த கூட்டம் அன்று இவரது இந்தப் பேச்சைக் கேட்டவுடன் மாநாட்டுக் கொட்டகைக்குள்ளேயே கைக்கு வளையல் போட்டுக்கொள்ள வேண்டுமே என்று கைகளை மறைத்துக் கொண்டு திரிந்தன-திரிகின்றன. ஆனால் இதனால் செட்டியாருக்கு லாபமென்ன நஷ்டமென்ன? 'சுதேசமித்திரன்' செட்டியாரைப் புகழ்ந்து இப்போதாவது செட்டியாருக்கு புத்தி வந்தது குறித்து மகிழ்ச்சி அடைவதாக எழுதி விட்டது, இது போதாதா?

ஆங்கில பத்திரிகையில் செட்டியார் ஒரு தீவிர இந்து என்பதாக இந்தியா முழுவதும் விளம்பரமாகி விட்டது -இது போதாதா? சு. ம. "தலைவர்" இந்துமகாசபை தலைவர் ஆகும்படியான நிலை, அதுவும் அமெரிக்காவும் ரஷ்யாவும் நேசநாடுகள் ஆனதுபோல் ஒரு பெரிய "அதிர்ஷ்டம்" அடித்துவிட்டதானது, மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

செட்டியார் அவர்கள் கொஞ்சம் வருஷங்களுக்கு முன்பு விருதுநகரில் ஒரு பெரும் கூட்டத்தில் பேசும்போது,

"சு. ம. சங்கக் கொள்கையைக் குற்றம் சொல்லும் எந்தச் சங்கத்திலும், ஸ்தாபனத்திலும் நான் சம்மந்தம் வைத்துக்கொள்ளமாட்டேன்" என்று சொன்னார். மற்றும் இவர் தலைமைவகித்த விருதுநகர் மாநாட்டில்தான், இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை என்றும் உயர் சமத்துவத்திற்கும், பேதம் ஒழிவதற்கும் மதம் ஒழிக்கப்படவேண்டும் என்றும் இவர் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகும்.

இதுமாத்திரமா? ஒரு காலத்தில் காந்தியார், சர் செட்டியார் அவர்களை "நீங்கள் இவ்வளவு மதத்தையும் சாஸ்திரங்களையும் மறுத்தும் கண்டித்தும் பேசுகிறீர்களே உங்களுக்கு குரு யார்" என்று கேட்டார். அதற்கு செட்டியார் "எனக்குக் குரு என்ன வந்தது? நானே தான் எனது ஆராய்ச்சியில் பேசுகிறேன்" என்று சொன்னார். அதற்குக் காந்தியார் "அது போதாது யாருடைய உபதேசமாவது இருந்திருக்கவேண்டும்" என்றார். அதற்கு செட்டியார் "யார் பெயரையாவது சொல்லவேண்டுமானால் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் பெயரைத்தான் சொல்லவேண்டும்" என்றார். உடனே காந்தியார் ஆச்சரியப்பட்டு பக்கத்தில் இருந்த தோழர் இராஜகோபாலாச்சாரியாரைப் பார்த்து,

"என்ன நம்ம நாயக்கர் இந்தக் கொள்கைக்காரரா" என்று கேட்டார். அதற்கு ஆச்சாரியார்,

"நாயக்கர் இப்போது மாத்திரமல்ல, அவருடன் எனக்கு வெகு நாளாக பழக்கமுண்டு, அப்பொழுதிருந்தே இந்த கொள்கை கொண்டவர்"

என்று சொன்னாராம். காந்தியார் நகைத்தாராம்.

இது சர் ஷண்முகம் அவர்கள் காரைக்குடி சு. ம. மாநாட்டுத் தலைமை உரையிலும் மற்றும் பெரியார் முதலியவர்களுடன் நேரிலும் சொன்னவைகளாகும்.

ஆனால் "மாறாமல் இருப்பவன் மனிதனாகமாட்டான்" என்கின்ற கொள்கை உடைய செட்டியார் கூற்றுக்கு இது எந்த விதத்தில் அதிசயப்படத்தக்கதாகும் என்பது விளங்கவில்லை.

"ஜஸ்டிஸ் கட்சி மேடைகள் சு. ம. பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்டது விசனப்படத்தக்கதாகும்" என்று செட்டியார் அவர்கள் தனது தலைமை உரையில் பேசி இருக்கிறார்.

செட்டியார் சென்றுவிட்டதைக் காட்ட, அவருடைய புதிய அவதாரத்தைக் காட்ட, உதாரணம் இதற்குமேல் அளவுகோல் வேண்டியதில்லை என்றே கருதுகிறோம்.

இப்படியெல்லாம் இவர் பேச நினைக்கும்போதே தலைமைப் பதவியை பேச்சு முடிந்தவுடன் ராஜினாமா கொடுத்துவிடத் தீர்மானித்துக் கொண்டே பேசி இருக்கிறார் என்றுதான் கருத வேண்டி இருக்கிறது. ஏனெனில் இந்தப் பேச்சு முடிந்தவுடன் வேறு ஒரு தோழரை (சர் ராஜனை) அந்த தலைமைப் பதவியில் வைத்துவிட்டு விலகிக்கொண்டார். ஆதலால் இவர் இப்படிப்பேசுவதற்கு அபாரதைரியம் ஒன்றும் வேண்டி இருக்கவில்லை என்பதும் நன்கு விளங்கும்.

ஆனால் செட்டியார் அவர்கள் இவ்வளவு தூரம் ஆத்திரம் காட்டி பழிவாங்கித்தீரவேண்டிய அளவுக்கு இவருக்கு சு.ம.காரர்களோ, ஜஸ்டிஸ் கட்சியினரோ, அல்லது வேறு யாரோ என்ன கெடுதி செய்தார்கள் என்பது விளங்கவில்லை. அல்லது இவருக்கு பார்ப்பனரால் என்ன சன்மானம் கிடைக்கப்போகிறதோ தெரியவில்லை.

நாடார் முதலாளிகளும், நாட்டுக்கோட்டை பிரபுக்களும், ஆந்திர ஜமீன்தார்களும் தமிழ் நாட்டு இலட்சுவான்தாரர்களும் 100க்கு 99 பேர்கள், ஏன் 100க்கு 100 பேர்கள் என்று சொல்லும்படியானவர்கள், தமது தலைமையை ஏற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லையே என்பதோடு மாநாட்டுக்கு அழைப்புக்குப் பதில்கூட பலர் எழுதாதகுறை ஆகியவை செட்டியாரை வருத்தி தலைமைப்பதவியில் இருந்து நீங்கிக்கொள்ளும்படி செய்து இருக்கலாம். அதற்கு யார் என்ன செய்யலாம். இவர்கள், இந்தக் கூட்டத்தவர்கள், அநேகர் தங்கள் புதுக் கட்சிக்கு மெம்பர்கள் என்றும், நிர்வாகிகள் என்றும், டெலிகேட்டுகள் என்றும் விளம்பரம் செய்தது இவர்கள் மீது தப்பே ஒழிய அவர்கள் மீது எப்படித் தப்பாகும்? அப்படித்தான் இருந்தாலும் அந்தக் கோபத்தை சு.ம.காரர் இடம் காட்டி திராவிடர்களின் முயற்சியை பழித்துக்கூறி ஆரியர்களைத் தஞ்சமடைவதுதான் அதற்கும் பரிகாரமா என்று கேட்கிறோம்.

எந்தக் கட்சிதானாகட்டும் ஒருவர் தலைவர் ஆவதற்கும் அவருக்கும் அவர் கூட்டு கம்பெனிக்கும் மந்திரி பதவிகிடைப்பதற்கும் கைதூக்குபவர்களுக்கு பட்டமும் சிறு உத்தியோகமும் கண்ட்ராக்டும் சாமான் புத்தகம் விற்பனை உரிமையும் கிடைப்பதுதான் கொள்கை என்றும், அதற்கும் குறிப்பிட்டவர்களுக்கு மேல் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது என்றும் உள்ளே நினைத்துக்கொண்டு எந்த மாதிரி ஆட்களையும் பத்திரிகைகளையும் கொண்டுதான் எவ்வளவு பிரசாரம் செய்தாலும் எவ்வளவுபணம்தான் செலவுசெய்தாலும்எப்படி உருப்படமுடியும்?

பொப்பிலிக்கு மேலாகவோ பெத்தாபுரத்துக்கு மேலாகவோ இவர்களால் செலவு செய்துவிட முடியப் போவதில்லை. அவர்களுக்கு மேலாக இவர்கள் பணம் கொடுத்து கையாள்களையோ பத்திரிக்கைகளையோ நடத்தப்போவதுமில்லை. மக்களுக்கு அவர்களிடம் உள்ள மரியாதைக்கு மேலாக இவர்களிடம் அதிகமாக ஏற்பட்டுவிடப் போவதுமில்லை. மற்றப்படி சர்க்கார் நியமனங்களில் ஏதாவது மரியாதை கிடைக்கலாம், வெளி சமஸ்தானங்களில் ஏதாவது திவான் பதவி வரலாம் அதற்குத்தான் தன்னை தீவிர இந்து என்றும் ஆரியம் திராவிடம் தப்பு என்றும் சொல்லி ரிக்கார்டு செய்துவிட்டார்.

பாகிஸ்தானை ஆதரிக்காத காரணத்தால் மத்திய அரசாங்க நிர்வாக சபையில் ஒரு ஸ்தானம் கிடைக்கலாம். கூட்டு மந்திரிசபை வரும்போது (வராது) இவர்களில் யாரையாவது பொறுக்கலாம். ஆனால் எதற்கும் மக்கள் மதிக்கவேண்டாமா?

இந்துவும், மித்திரனும் செட்டியார் அவர்களை தூக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் சர் ராமசாமி முதலியார்ரொம்பவும் மேலேபோய்விட்டார், இனி அவரைக் கவிழ்க்க நம்மில் ஒரு கை ஆள்பார்ப்பனருக்குஇப்போது மிகவும் அவசரம். ஆதலால் செட்டியார் அவர்களை ஆதரிக்காமல் முடியாது. அதற்கும் செட்டியார் தகுதி ஆய்விட்டார்.

அதாவது;

ஆரியர் திராவிடர் இனப்பிரிவினை கிடையாது!

திராவிடஸ்தான் பாகிஸ்தான் முடியாது!!

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 19-5-45ந் தேதி வரை 32506 அங்கத்தினர்கள்
## ரூ. 3196—6—0 சந்தா

மே மாதம் 19-ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் இரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 6825 | 9. சென்னை | 1747 |
| 2. தஞ்சை | 5704 | 10. மதுரை | 1432 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 831 |
| 4. திருச்சி | 3836 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 192 |
| 5. இராமநாதபுரம் | 2293 | 13 பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2114 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1877 | | |
| 8. வட ஆற்காடு | 1828 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 32506. சந்தா ரூ. 3196 6-0

# போலிகளின் போலி மாநாட்டின் நடவடிக்கைகள்

(கவனித்தவன்)

S. I. L. F. என்னும் போலி மாநாட்டின் நடவடிக்கைகள் சரியானபடி பத்திரிகைகளில் காணப்படவில்லை. மாநாடு நடத்தியவர்கள் அனுப்பிய பேச்சுக்களும் தீர்மானங்களுமே பெரிதும் தினசரிகளில் காணப்படுகின்றன. ஆனால் நான் பொதுவாகக் கவனித்த சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

மாநாட்டின் சொந்தப் பத்திரிகையான சண்டே அப்சர்வர் பத்திரிகையில் காணுகிறபடி பார்த்தாலே மாநாட்டு மண்டபத்திற்குள் ஒரு 200, 300 பேர்கள்கூட இருந்திருப்பதாகத் தெரியவில்லை, மற்ற பத்திரிக்கைகளும் அப்படித்தான் எழுதின. ஆனால் சுமார் 20 போலீஸ் லாரி இருந்தன.

மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் என்ற கணக்கில் "பெரிது சிறிது" எல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் சென்னை மாகாணம் முழுவதற்கும் 150 பிரதிநிதிகள் போல்தான் வந்ததாகக் காணப்படுகிறது; அதுவும் அதில் 8-ல் ஒரு பங்குப் பேர்கள் கூட முன் பின் காதால்பேர்கேட்டபேர்வழிகளாக இல்லை. இப்படிப்பட்டவர்களை எண்ணிக்கையில் தாலுகாவுக்கு ஒரு பிரதிநிதிகள்கூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இதுதான் 4-கோடி மக்களுக்கு "பிரதிநிதித்துவமான மாநாடு"

## தஞ்சை

உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கு இருந்து 3 பிரதிநிதிகள் வந்ததாகக் காணப்படுகின்றன. தஞ்சை ஜில்லாவில், ஜஸ்டிஸ் கட்சிக்கு, திராவிடர் கழகத்திற்கு இன்று 6000 மெம்பர்களும் சுமார் 40, 50 கிளை சங்கங்களும் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஜில்லாவில் இருந்து தோழர்கள் ராவ்பகதூர் அருணா கந்தசாமி நாடார், ராவ்சாகிப் குமாரசாமி பிள்ளை, மற்றும் ஒரு தோழர் கே. ராமசாமி பிள்ளை என்பவர் ஆகியவர்கள். ஆனால் தஞ்சை ஜில்லாவில் உள்ள மிராசுதாரர்கள், பெரிய வியாபாரிகள், பணக்காரர்கள் எல்லோருடைய பெயரையும் போட்டு டெலிகேட்டுகளாக வருகிறார்கள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு மக்களை மயக்கப் பார்த்தும், நேரில் ஆள்கள் சென்று யார்யாரையோ கெஞ்சி அழைத்தும் என்ன செய்தும் அங்கு இந்த 3 பேர்களைத்தான் பிடிக்க முடிந்திருக்கிறது. அதில் இருவர் பட்டம் பதவிதாரிகள், ஒருவர் பேர் தெரியாதவர், 'சாமியப்பா கூட்டம்' தலைகாட்டவே இல்லை.

## திருச்சி

சு. ம. கட்சியையும், திராவிடர் கழகத்தையும் அப்படியே மேடோவர்செய்து கொடுக்க அம்மாநாட்டுக்கு வந்த தோழர் விஸ்வநாதம் அவர்கள் ஜில்லாவாகிய திருச்சி ஜில்லாவில் இருந்து வந்தவர்கள் தோழர்கள் விஸ்வநாதம், திருமலைசாமி, சைமன் இராமசாமி, வெங்கிடாசலம், அமிர்தம்பிள்ளை, கோவிந்தராஜு, என். எஸ். கந்தசாமி, டி. பத்மநாப செட்டியார், எம். முத்துசாமி செட்டியார், வி. பி. சந்திரஹாசம் பிள்ளை, பெருமாள் நாயுடு, ப. அங்கமுத்து ஆகியவர்களே. இவர்களில் ஜஸ்டிஸ் கட்சிக்கு முன் தெரிந்தவர்கள் எத்தனை பேர்? நீங்கள் தான் சொல்லுங்கள் பார்க்கலாம். 5000 மெம்பர்கள் உள்ள திருச்சி ஜில்லாவின் நிலை இது. மற்றும் ஜஸ்டிஸ் கட்சிக்கு பல மாஜி ஸ்தலம் என்று சொல்லப்படும் இடம் இது.

## கோவை

அங்குதான் அப்படி என்றால் மாநாட்டின் தலைவரின் ஜில்லாவாகிய கோயமுத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கும் திராவிடர் கழகத்துக்கு (ஜஸ்டிஸ் கட்சி)க்கு 6000 மெம்பர்களும், சுமார் 30-க்கு மேற்பட்ட சங்கங்களும் இருக்க இந்த போலி மாநாட்டுக்கு வந்ததாகக் காட்டப்பட்டிருக்கும் பிரதிநிதிகள், தலைவர் சர் ஷண்முகம் செட்டியாரின் சொந்த நண்பர்களும் சதா கூட இருந்து தமாஷாக நேரம் போக்கிக்கொண்டு இருக்கிறவர்களுமே அதிகமானவர்களாவார்கள். அப்படிப்பட்டவர்களும் சேர்ந்து 10 பேர்களே தான். அதில் தோழர் ஜே. எஸ். கண்ணப்பர் முக்கியம் வாய்ந்தவர் கோவை திராவிட கழக ஜஸ்டிஸ்கட்சியின் முக்கியஸ்தராம்.

## மதுரை

மாநாட்டிற்குப் பின் தெரிந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் தலைவரான சர் பி. டி. ராஜன் அவர்களது (மதுரை) ஜில்லாவில் இருந்து வந்த பிரதிநிதிகளின் தன்மையோ அதேபோல் சர் ராஜன் அவர்களது சொந்த சினேகிதர் அவருக்கு நன்றி செலுத்தவேண்டியவர் கூட்டமே அதில் அதிகம் இருக்கும் எல்லாம் 10 பேர்கள் தான்.

## இராமநாதபுரம்

இனி இராமநாதபுரம் ஜில்லாவை எடுத்துக் கொள்வோம். இந்த ஜில்லா தான் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தாய், பொக்கிஷம், மூளை என்று கூட சொல்லப்படுவது இப்படிப்பட்ட அந்த ஜில்லாவில் இருந்து ஒரே ஒரு பிரதிநிதி அதுவும் இதுவரை காதால் பேர் கேட்டிராத தோழர் ஒரு வி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் என்பவர்தான். நகரத்தார்களும் நாடார்களும் தலைகாட்டவில்லை.

## மாபெரும் சென்னை

இனி சென்னையை எடுத்துக் கொண்டோமேயானால் அதுவும் தோழர்கள் அங்கமுத்து, பி. பாலசுப்பிரமணியம், பி. ஆர். ராமநாதன், டாக்டர் சாமியுல், பி. வேலாயுதம், அப்துல் கபூர், கே. என். ஸ்ரீராமலு நாயுடு, ஆர். ராஜமாணிக்கம், என். தங்கவேலு, எச். எம். ஜகநாதம் ஆகியவர்களோடு மதனகோபால் நாயுடு, தாமோதரம் நாயுடு டி. ஆர்.

---

**இந்து மதத்தைக் குற்றம் சொல்லுவது தகாது!!!**

என்று சொல்லிவிட்டார், [illegible] இதற்கு மேல் பார்ப்பனர்கள் எலக்ஷனுக்கு வேறு குவாலிபிகேஷன் என்னவேண்டும்?

திராவிட சமுதாயமே! உன் நிலை. இவ்வளவு கெட்டும் இந்த 20-வது நூற்றாண்டிலும் இன்னும் அனுமார், விபீஷணன் நிலை தானா? படு.

கோதண்டராம முதலியார், என். ஜி. ரங்கராமானுஜம், மணியர், சுந்தரராவ் நாயுடு, மோகனரங்கம் ஆகிய இவர்களேயாவார்கள். இவர்களில் இரண்டு மூன்று பேர்கள் தவிர மற்றவர்களில் பலர் சதா சண்டை போட்டுக்கொண்டு தேர்தல்களில் ஒருவருக்கொருவர் ஒரே கட்சி போரால் போட்டிபோட்டுக் கொண்டு தலைவரை வைது நெருக்கிக்கொண்டே இருப்பவர்கள்.

### திருநெல்வேலி

இனி இரண்டு மந்திரிகள் வாழ்ந்த திருநெல்வேலி ஜில்லாவிலும் இதுபோலவேதான் இருக்கின்றன. பெரிதும் புதிதே தவிர பழைய சமீபகாலம்வரை கட்சியில் இருந்த தோழர்கள் பெயர்கள் காண முடியவில்லை.

### கட்சி அல்லாதவர்களும் விசேஷப் பெரியவர்களும்

பொதுவாக மாநாட்டுக்கு சமூகம் அளிக்க வந்திருந்தவர்களில் குறிப்பிடத்தகுந்த கனவான்கள் என்ற தலைப்பில்,

'தோழர்கள் மாஜி மந்திரி எஸ்' ராமநாதன், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, (சர் ராமசாமி முதலியார் மகன்) கே. சி. நம்பியார், பி. ராஜநாதன், சி. பார்த்தசாரதி, கே. கே. கணபதி, பி. எம். பாலசுப்பிரமணிய முதலியார், ஜி. ஜானகிராம செட்டியார், சி. தாணுலிங்க முதலியார் ஆகியவர்களும் பெண்களில் அலமேலுமங்கை தாயாரம்மாள், பார்வதியம்மாள், ராஜேஸ்வரம் மனைவியார், மலர்முகத்தம்மாள், குசலாம்பாள், செல்வகுமாரி, முத்துமனைவியார், பத்மா அம்மையார், நாகம்மாள், தர்மாம்பாள், ராஜம்மாள், ஆகியவர்களும், இதுவும் பெரிதும் புதிதே. இவர்கள்தான் அப்பத்திரிகையில் காணப்படுகின்றனர்.

### பாராட்டுத் தந்திகள் 'பறந்தவை'

இது தவிர மாநாட்டை வாழ்த்தி தந்தி அடித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் என்ற தலைப்பில் டாக்டர் அழகப்ப செட்டியார், தோழர்கள் என். ஆர். சாமியப்ப முதலியார், [illegible] சென்ற பனகால் அரசரின் தலைமையனார், கே. ராகவன், மாதவராஜா, சோமசுந்தர அப்பாராவ் ஆகியவர்கள்தான்.

(இவைகள் 'சண்டே அப்சர்வர்' பத்திரிகையில் காணுகிறபடி அந்தந்தத் தலைப்பின் கீழ் உள்ளவர்கள் எல்லாம் ஒன்று விடாமல் குறிப்பிடப்பட்டவைகளாகும்). எனவே இவற்றிலிருந்து அம்மாநாட்டின் தன்மையையும் பிரதிநிதித்துவத்தையும் அதற்கு உள்ள செல்வாக்கையும் வாசகர்களே தெரிந்துகொள்ள விட்டுவிடுகிறோம்.

மொத்தத்தில் அங்கு கூடியிருந்த ஜனங்கள் முதல் நாள் 275-ம், 2-ம் நாள் 56-ம் தான் என்று சரியாகக் கணக்கெடுத்து அறிவிக்கப்படுவதாகும்.

முதல் நாள் டீபார்ட்டி இருந்ததால் எண்ணிக்கை அவ்வளவாவது இருந்தது என்று சொல்லுவேன்.

### துவக்கம்

கூட்டம் துவக்கும்போது கடவுள் வாழ்த்தாக ஒருவர் "மூஷிக வாகனனே" என்று பாட ஆரம்பித்தவுடன் அது கூடாது என்று கலவரம் ஏற்பட்டது, சு. ம. காரருக்கு இங்கு இடமில்லை என்று ஒருவர் சொல்ல அதிகாரத்தால் அடக்கப்பட்டது.

தலைவர் சர் ஷண்முகம் செட்டியார் தலைமை உரை நிகழ்த்த எழுந்த உடன் கூட்டத்தைப் பார்த்து ஏமாற்றமடைந்துவிட்டதாகவும், பல குறிப்பிட்ட நபர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்ததாகவும் அவர்கள் வரவில்லை என்றும் கூறி கவலையுடனேயே சொற்பொழிவை வாசித்தார்; சில சேர்த்தும் சொன்னார். முடிவில் அதிகம் பேர் இம்மாநாட்டுக்கு வராததற்கு ஆக நாம் வருந்தவில்லை என்று சொல்லி முடித்தார். அப்பொழுதே இனி நாம் தலைமைப் பதவிக்குப் போவதில்லை என்பதை உறுதி செய்து கொண்டார் என்றே சொல்லுவேன்.

இவை ஒருபுறமிருக்கட்டும். சர். ஷண்முகம் செட்டியார் அவர்களது தலைமை உரையில் தன்னை இந்து மதஸ்தன் என்று சொல்

## பெரியார் ஈ. வெ. ரா.

### உடல் நிலை

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு திருப்பூர் வந்துபோனது முதல் உடல் நிலை கெட்டு 4-நாள் வயிற்றுவலியும் வயிற்றுப்போக்கும் ஏற்பட்டு ஈரோடு வந்து டாக்டர் முத்துசாமி அவர்கள் இடம் சிகிச்சை பெற்று திரும்பவும் ஏற்காடு சென்று இருக்கிறார்.

23-ந்தேதி இறங்கி திருப்பத்தூர் சென்று அங்கிருந்து 25-உ ஈரோடு வந்து 27-ந் தேதி சூலூர் சென்று ஈரோடு வந்து ஏற்காடு சென்று 2-நாள் இருந்து விட்டு சென்னை செல்வார்.

### சாக்கோட்டை சுயமரியாதைச் சமதர்ம சங்கம்

மேற்படி சங்கத்தின் 11-வது ஆண்டுவிழா 27-5-45-ல் திருச்சி முனிசிபல் கவுன்சிலர் தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் சாக்கோட்டை பெரியார் பார்க்கில் நடைபெறும்.

---

லிக்கொண்டார்; திராவிடர் ஆரியர் கலந்துவிட்டனர் என்றார். திராவிட நாட்டுப் பிரிவினையோ பாகிஸ்தான் பிரிவினையோ இவருக்கு . தீண்டத்தகாதகாக ஆகிவிட்டன. திராவிட இனஉரிமை என்பதை கேலிக்கூத்தாக கருதினார். இந்துமதம் ஆரியரால் ஏற்பட்டது என்பதற்காக அதை வெறுக்கக்கூடாது என்றார்.

இந்து மதத்தை குறைகூறுபவர்களிடம்தான் அவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியாது என்றார். இதுதான் சொற்பொழிவில் முக்கியத்துவம்.

இவ்வளவு சொல்லிவிட்டு வெளி வந்ததும் தோழர் எஸ். இராமநாதன் அவர்கள் சர் ஆர். கே. ஷண்முகத்தைப்பார்த்து "என்ன இப்படி குழப்பிவிட்டீர்களே எல்லாம் புதிதாயிருக்கிறதே" என்றார். அதற்கு சர் ஆர். கே. எஸ்., ச்சொ, என்று சிரித்தார், பக்கத்தில் இருந்த ஒரு ராவ்பகதூர் "இது என்ன ஒரு சிறு மீட்டிங்குதானே" என்றார்.

மற்றவைகள் பின்னால்,......

# கோவை ஜில்லா திராவிடர் கழகம்
## நிர்வாகக்கூட்டம்

ஈரோடு, மே. 16—

ஷை கூட்டம் ஈரோடு திராவிட கழகக் கட்டிடத்தில் 15-5-45ந் தேதி மாலை சூலூர் திராவிடர் கழகத் தலைவர் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் திராவிட இன எழுச்சியை இலக்கியத்தின் வாயிலாய் தைரியமாக வெளிப்படுத்திவந்த தோழர் கா. சுப்ரமண்யம்பிள்ளை இயற்கையெய்தியதைக் குறித்து வருந்துவதாகவும், அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

சேலம் மகாநாட்டில் S. I. L. F. என்பது திராவிடன் பெடரேஷன் என்றும், தெ. இ. ந. உ. சங்கம் என்றிருந்தது திராவிடர் கழகம் என்றும், நடைமுறைப்படியும் சட்டப்படியும் மாற்றப்பட்டதென்றும் அதற்குத்தான் ஜஸ்டிஸ்கட்சியென்றும், மே 7-ந் தேதி சென்னையில் கூடிய கூட்டம் ஜஸ்டிஸ் கட்சி கூட்டமாகாதென்றும், அதன் நடவடிக்கைகள் ஜஸ்டிஸ் கட்சி நடவடிக்கைகள் ஆகாதென்றும், ஜஸ்டிஸ் கட்சியாக அவர்களை சர்க்காரும் பொது மக்களும் கருதக்கூடாது என்றும், இக்கூட்டம் தீர்மானிப்பதுடன் இத்தீர்மானத்தை சென்னைக் கவர்னருக்கும், பிரதம காரியதரிசிக்கும், டில்லி வைஸ்ராய்க்கும், லண்டனிலுள்ள இந்திய மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும் தந்திகளும் தபால்களும் அனுப்புபடி காரியதரிசியைக் கேட்டுக் கொள்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தபடியாக கோவை ஜில்லா திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினராயிருந்த தோழர் ஜெ. எஸ். கண்ணப்பர் சென்னைக் கூட்டத்தாருடன் சேர்ந்து பதவி ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிவதால், இதற்குச் சமாதானம் கோரி அன்னாருக்குக் கடிதம் எழுதவேண்டுமென்றும் 10 நாட்களுக்குள் அவரிடமிருந்து பதில் வராவிட்டால் அவர் இக்கமிட்டியிலிருந்து நீக்கப்பட்டவராவாரென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கோவை ஜில்லா திராவிடர் கழக 2-வது மகாநாட்டைக் கோபியில் நடத்துவதாக தோழர் ஜி. இ. கண்ணியப்பன் கொண்டுவந்த அழைப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு தோழர்கள் என். அர்ச்சுனன், பி. பழனிச்சாமி, எஸ். கே. கருப்பண்ணன், எஸ். ஆர். சந்தானம், ஜி. இ. கண்ணியப்பன் ஆகியவர்களடங்கிய ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டது.

கோவை ஜில்லாவில் நடைபெறப் போகும் மாணவர் சுற்றுப்பிரயாணத்தில் ஆங்காங்குள்ள சங்கங்கள் வேண்டிய உதவிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும் இக்கமிட்டியிலிருந்து ரூ 50 நன்கொடையளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது 200 அங்கத்தினர்களையாவது சேர்க்க வேண்டுமென்று மிகவும் கண்டிப்பாக வற்புறுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திலே, மாணவர் சுற்றுப் பிரயாணத்திற்காக சொந்த முறையில் தோழர்கள் ப. பழனிச்சாமி ரூ 10ம், எஸ் கே. கருப்பண்ணன் ரூ. 5ம், எம் கந்தசாமி ரூ. 5ம் நன்கொடையளித்தார்கள். கமிட்டி மெம்பர்களுக்கு செயலாளர் தோழர் ப. பழனிச்சாமி அவர்களால் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்களின் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## திராவிடர் கழகம் திருப்பத்தூர் (R. D.)

1944-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ல் நடைபெற்ற தேர்தலின்படி தோழர்கள் சின்னத்துரை தலைவராகவும், ஆசிரியர் முருகையா உபதலைவராகவும், இமயவரம்பன் செயலாளராகவும், சி. ரெங்கசாமி பொருளாளராகவும், மற்றும் ஒன்பது பேர் நிர்வாகிகளாகவும் இருந்து தொண்டாற்றி வருகிறார்கள்.

## குறிப்பு

இவ்வாரம் முக்கியமான கட்டுரைகள் வெளிவரவேண்டியிருந்ததால், திராவிட மாணவர் நிகழ்ச்சிகளும் மற்றச் செய்திகளும் இடம் பெற முடியாது போய் விட்டன. அடுத்த வாரம் வெளிவரும்.

ஆசிரியர்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

21- பெண்ணாடம்
22- முருகன்குடி
25- மீன்சுருட்டி (திருமணம்)

வட ஆற்காடு: தோழர் ஜனார்த்தனம் எம். ஏ, தலைமையில் இம்மாவட்டத்தில் இம்மாத இறுதியில் ஒரு மாணவர் குழு பிரசாரத்துக்காகப் புறப்பட இருக்கிறது. கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் உடனே எமக்கு எழுதவும்.

செங்கற்பட்டு: இம்மாவட்டத்தில் காஞ்சிபுரம் தோழர் டி. பி. எஸ். பொன்னப்பா அவர்களால் கிராமப் பிரசாரம் நடைபெறுவதால் இங்கு மாணவர் பிரசாரம் நடத்தவில்லை.

* *

சுற்றுப் பிரயாணத்திலுள்ள மாணவத் தோழர்கள் தத்தம் கூட்ட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் எமக்கு எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

* *

இதுவரை நடைபெற்ற மாணவர் பிரசார நிகழ்ச்சிச் செய்திகள் இடமில்லாத காரணத்தால் இவ்வாரம் வெளிவரவில்லை. அடுத்த 'குடிஅரசு' இதழில் வெளியிடப்படும்.

* *

நமது இயக்க டார்ப்பிடோவான வேலூர் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் எம். ஏ, பரீட்சையில் தேர்ச்சியடைந்துள்ள செய்தியை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

## சூலூரில் பொதுக்கூட்டம்

27-5-45-ந் தேதி மாலை 5 மணிக்கு பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் ஷை கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா., புரட்சிக் கவி பாரதிதாசன் மற்றும் பல தோழர்களும் பேசுவார்கள்.

## தேநீர் விருந்து

முத்துப்பேட்டை சாகத்திலிருந்து தஞ்சை ஜில்லா போர்டிற்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஏ. எஸ். என். சாமிதுரைதேவர் அவர்களுக்கு தென்னவராய நல்லூர் மிராசுதாரரும் கிராம முனிசீப்புமான தோழர் ரெத்தினசபாபதி அவர்கள் இல்லத்தில் 3-5-45-ந் தேதி திருவாரூர் ஜனாப் டி. ஏ. முகமது யாகூப் அவர்கள் தலைமையில் ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

## கோவைமாவட்ட திராவிட மாணவர் மாநாடு, ஈரோடு

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் 6-5-45-ந் தேதி காலை 9-30 மணிக்கு மாநாடு தொடங்கியது. துறையூர் தோழர் அ. மா. பெரியசாமி செங்கொடியினை ஏற்றிவைத்தார். பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவத் தோழர் சி. தியாகராசன் மாநாட்டைத் திறந்து வைத்தார். மாநாட்டு வரவேற்புக் கழகத்தின் சார்பாக வரவேற்புத் தலைவர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் யாவரையும் வரவேற்றுப் பேசி, மாநாட்டுக்குத் தலைமை தாங்க, தோழர் க. அ. மதியழகனை முன்மொழிந்தார். அதை வழிமொழிந்து தோழர்கள் எஸ். தவமணிராசன், மைதீன் பாட்சா, நெடுஞ்செழியன் ஆகியோர் பேசிய பின் அண்ணாமலை நகர் மாணவர் தோழர் க. அ. மதியழகன் தலைமையேற்று முன்னுரையாக சுமார் ஒரு மணி நேரம் பேசிய பின் தோழர்கள் டி. பி. வேதாசலம், சிதம்பரம் ராமசாமி, புலவர் குழந்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பிற்பகல் மூன்று மணிக்கு மறுபடியும் மாநாடு தொடங்கியது. அநேக மாணவத் தோழர்களால் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செல்வி அப்துல் கனி, புலவர்கள் இளங்கோ, குழந்தையா, எழில் நிலவன், தோழர்கள் நெடுஞ்செழியன், ஜனார்த்தனம் ஆகியோர் விரிவுரையாற்றினார்கள். இறுதியாக பெரியார் அவர்கள் நீண்ட சொற்பொழிவாற்றினார்கள். பின் தோழர் எஸ். தவமணி நன்றி கூறலுடன் மாநாடு கலைந்தது.

### பொதுக் கூட்டம்

பின்னர் 6உ மாலை 7½ மணிக்கு அதே இடத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவத் தோழர் இரெ. இளம்வழுதி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசிய பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் இரண்டு மணி நேரம் திராவிடர் நிலையைக் குறித்து விளக்கமாகப் பேசினார்கள்.

இரவு 11-மணிக்கு சரஸ்வதி ஹாலில் தோழர் ஆர். எஸ். மணி அவர்களால் தக்க பக்கமேளங்களுடன் ஒரு தமிழிசைக் கச்சேரி நடைபெற்றது. இதற்கு ஈரோடு தோழர் எம். ஜி. அங்கப்ப செட்டியார் தலைமை தாங்கினார்.

குறிப்பு: ஷை மாநாடு மிகுந்த குறுகிய கால அளவில் குறிக்கப்பட்டிருந்தும், மிகச் சிறப்புடன் நடந்தேறியதற்குப் பெருந்துணையாக இருந்தவர்கள் ஈரோடு சித்திக்தொண்டர் படையினரும், தோழர் எ. சேக்தாவூத சாயபு அவர்களின் தலைமையில் ஷை தொண்டர் படையினர் இரவும் பகலும் உழைத்த உழைப்பாலே இம்மாநாடு வெற்றியுடன் நடைபெற முடிந்தது. ஷை தொண்டர் படையினருக்கு மாநாட்டு வரவேற்புக் கழகத்தாரால் தோழர் எச். பாட்சா சாயபு அவர்கள் தலைமையில் ஈரோடு திராவிட மாணவர் கழகத்தில் 8-5-45-ந் தேதி மாலை ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அவர்களது தொண்டினை தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எ. மைதீன்பாட்சா சாயபு முதலியவர்கள் பாராட்டினார்கள். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களால் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. தோழர் ஷஹாப்பால் நன்றி கூறப்பட்டது.

### தீர்மானங்கள்

1. தோழர் கா. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ., எம். எல், மதுரை மாணவர் சத்தியேந்திரன் தாயார் ஆகியோர் இயற்கை எய்தினமைக்கு இரங்குவதாகவும்,
2. பள்ளிப் பாடப் புத்தகங்களில் பாரதிதாசன் பாடல்களைச் சேர்க்கும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதாகவும்,
3. தமிழாசிரியர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்வதாயும்,
4. திராவிட நாட்டுப் பிரிவினையை ஒத்துக்கொண்டு ஆதரிப்பதாயும்,
5. முஸ்லிம்கள் மதத்தால் வேறுபடினும் இனத்தால் திராவிடராதலால் திராவிடர்களுடன் ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்வதாயும்,
6. சித்திக் தொண்டர் படையைப் பாராட்டி இதைப் போல் பல ஊர்களிலும் தொண்டர் படைகள் நிறுவுமாறு கேட்டுக் கொள்வதாகவும்,
7. கல்லூரி உணவு விடுதிகளில் பார்ப்பனருக்கு பார்ப்பனரல்லாதாருக்கு என இருக்கும் பேதமுறையை ஒழிக்க வேண்டுமெனவும்,
8. எல்லா ஊர்களிலும் திராவிட மாணவர் கழகங்கள் ஏற்படுத்தும்படிக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## தஞ்சைமாவட்ட ஷெடியூல்ட் மாணவர் சுற்றுப்பிரயாணம்

நிகழும் 7-5-45-ந் தேதி முதல் ஷை மாவட்ட கழக மாணவர்கள் தஞ்சை மாவட்ட ஷெடியூல்டு கழக அமைப்பாளர் தோழர் எஸ். மணி அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட இடங்களுக்குச் சென்று சமூக முன்னேற்றத்தைக் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்கள்.

7-உ தோகூர், 8-பாதிரிகுடி, 9-திருப்பூந்துருத்தி, 10- ஆலக்குடி, 11- அகப்பேட்டை, 12-வெங்கிடசமுத்திரம், 13- தஞ்சைமாவட்ட ஷெடியூல்ட் மாவட்ட சன்மார்க்க கழக திறப்பு விழாவுக்குச் செல்வார்கள்.

## சென்னையில் பாரதிதாசன் தினம்

29-4-45 ஞாயிறு மாலை 6மணிக்கு சென்னை சுயமரியாதைச் சங்க சார்பில், செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், பாரதிதாசன் 54வது பிறந்தநாள்விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான தோழர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தோழர் கே. கோவிந்தசாமி, முன்மொழிய, என். வி. நடராசன் வழிமொழிய மாஜி மந்திரி எஸ். ராமநாதன் தலைமை வகித்தார்.

தோழர்கள் கா. அப்பாதுரைப்பிள்ளை டி. சண்முகம், வித்வான் ராஜமாணிக்கம், விஜயரங்கம், துரைராஜ், கே. அன்பழகன் மற்றும் பலர் பாரதிதாசன் நாட்டிற்கும், கலைக்கும், பகுத்தறிவு உலகிற்கும் செய்துள்ள சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

தோழர் எஸ். ராமநாதன் தமது தலைமை உரையில், பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) அவர்கள் பாரதியாரைவிட சகல துறைகளிலும் உயர்ந்தவர் என்றும் அவரின் நிதிக்காக திராவிடநாட்டு மக்கள் தாராளமாக உதவ முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

## கமிட்டிக் கூட்டம்

திருநெல்வேலி—பாளையங்கோட்டை திராவிடர் கழகத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் 2-5-45 மாலை 6 மணிக்கு தோழர் எ. வி. முத்தையா அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நீதிக் கட்சியின் முன்னைய காரியதரிசி டாக்டர் வைகுண்ட ராமபிள்ளை அவர்களும், தமிழ்ப் பேரறிஞரும், நாடகச் சட்ட விரிவுரையாளருமான பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் இயற்கை எய்தமைக்கு இக்கழகம் வருந்துகிறது.

மாணவர்கள் சுற்றுப்பிரயாணத்தில் மாணவர்கள் திருநெல்வேலிக்கு வரும் போது முக்கியமான இடங்களில் கூட்டங்கள் நடத்தவும், அவர்களது செலவுக்காக ரூ. 100 நிதி திரட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

'புரட்சிக் கவி பாரதிதாசன் நிதி'க்காக பணம் வசூலிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை யன்று மாலை 6 மணிக்கு நிர்வாக உறுப்பினர்கள் கூடி இயக்கப் பத்திரிகைச் செய்திகள் பற்றி ஆராயவும், கழக அபிவிருத்திக்கானவற்றை ஆக்கவும் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

# திருமணங்கள்

## ஜம்புலிங்கம்—புண்ணியவதி

திருச்சி வழக்கறிஞர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களது அண்ணன் மகன் தோழர் ரா. ஜம்புலிங்கம் பி. எஸ்சி., அவர்களுக்கும் நாகை வெளிப்பாளையம் தோழர் இராமசாமி பிள்ளை இளைய மகள் தோழர் புண்ணியவதி அம்மாள் பி. ஏ., அவர்களுக்கும் திருச்சி தென்னூர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் 24-5-45-ந் தேதி பகல் 12-45 மணி முதல் 2 மணி வரை மாவட்ட ஆவணப்பதிவாளர் முன்னிலையில் திருமணம் பதிவு செய்யப்படும்.

---

சிதம்பரத்தில் தோழர் நடேசனுக்கும், தோழர் அம்மணிக்கும் அண்மையில் நடைபெற்ற பதிவு ஒப்பந்தத்தின் பின் 10-5-45-ந் தேதி காலை நாகை சிவராமசாமி (ஆதிதிராவிடத் தலைவர்) அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அதுகாலை மனோகரன், திருஞானசம்பந்தம், க. சு. மணி, தவமணிராசன் இராமச்சந்திரன், முருகேசன் ஆகியோர் சீர்திருத்தத் திருமணம் முதலிய பல பொருள் பற்றிப் பேசினார். 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சாக்கோட்டையில் 2-5-45-ந் தேதி தோழர்களான வீ. சண்முகம்-ராஜலெட்சுமி, என். சண்முகம்-ஜெயம்மாள் ஆகியவர்களுக்கு சீர்திருத்த பதிவு திருமணம் தோழர் கே. கணபதி அவர்கள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. திருமணங்களைத் தஞ்சை ஜில்லா ரிஜிஸ்திரார் வந்திருந்து பதிவு செய்தார். மணமக்கள் மாலை, மோதிரம் மாற்றிக்கொண்டனர். திருமணங்களைப் பாராட்டி அநேக ஆசிக் கடிதங்களும், தந்திகளும் படிக்கப்பட்டன. பலர் தம்பதிகளுக்குப் பரிசுகள் வழங்கினர். பின்னர் திருமணப் பாராட்டுதல் கூட்டம் தோழர் முத்துதனபாலன் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சாக்கோட்டை சுயமரியாதைச் சமதர்ம சங்கத்தாரால் மணமக்களுக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. திருமணங்களைப் பாராட்டித் தோழர்கள் என். வி. சின்னதம்பி (ஆனரரி மாஜிஸ்திரேட்) எஸ். கே. சாமி, பாலகிருஷ்ணன், அ. பொன்னம்பலனார், ராமாமிர்தத்தம்மாள் ஆகியவர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

இத் திருமணங்களை முன்னிட்டு சாக்கோட்டை சங்கத்திற்கு ரூ. 2-ம் "குடி அரசு"க்கு ரூ. 2-ம் நன்கொடை வழங்கப்பட்டது.

# திராவிடக்கழகங்கள்

தவிட்டுப்பாளையம் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் ஆ. சபாபதி தலைமையில் 27-4-45-ல் கூடிற்று. தோழர்கள் சு. கருப்பணன், க. சின்னப்பன், ஆ. கணபதி முதலியவர்கள் பேசினார்கள்.

* *

1-5-45 மாலை பொன்மலை திராவிட வாலிபர் கழக சார்பில் மேதின விழா தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. ராதாகிருஷ்ணன், சிவஞானம் சேவியர், மீன்புசல் ராஜா, டி. கே. சீனிவாசன், ஏ. கே. பாஷா ஆகியோர் தற்கால இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போலிக் கூச்சல்களையும் சூழ்ச்சிகளையும் விளக்கிப் பேசினார்கள்.

* *

கோமாகுடி திராவிட மாணவர் கழக பொதுக் கூட்டம் தோழர் ஆ. பாண்டுரங்கனார் தலைமையில் 29-4-45-ல் மாலை 4 மணிக்கு நடைபெற்றது. பல மாணவத் தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

தூத்துக்குடி நகர திராவிட கழகத்தின் பொதுக்கூட்டம் தோழர் ஆறுமுகப்பெருமாள் தலைமையில் 1-5-45-ந் தேதி நடைபெற்றது. அதுசமயம் மே 8 முதல் ஆரம்பமாகும் மாணவர் சுற்றும் பிரயாணத்தின்போது இவ்வூர் சர் ஏ. டி. பி. செல்வம் சங்கம், மேலச்சண்முகபுரம் திராவிட கழகம் ஆகியவைகளின் ஆண்டு விழாக்களை நடத்துவதென்றும், சென்னையில் மே 7, 8 தேதிகளில் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் கூட்டப்போகும் மாநாடு திராவிட மக்களின் ஆதரவைப் பெற்றதல்லவென்றும் ஒரு சிறு சுயநலக் கூட்டத்தாரின் மாநாடு என்றும் இதை திராவிட மக்கள் அனைவரும் நிராகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் நிர்வாகக் கூட்டம் 2-5-45ந் தேதி தோழர் எஸ். நடராசன் தலைமையில் கூடியது. அதுசமயம், 12-6-45க்குள் கழக சந்தா பூராவையும் வசூல்செய்து வரவுசெலவு பரிசீலனைசெய்து ஆண்டுவிழாவையும் தேர்தலையும் நடத்தவேண்டுமென்று தோழர்கள் ஜி. பாலகுருசாமி, பெருமாள், முத்துக் கிருஷ்ணன் ஆகியவர்களைக் கேட்டுக் கொள்வதாகவும், மே தினப் பொதுக் கூட்டத்தின் வரவு செலவு கணக்கை ஒப்புக்கொள்வதாகவும், திராவிட தொழிலாளர் சங்கமொன்றை டை கழகத்தின் ஆதரவில் ஆரம்பிக்க தோழர் எ சின்னையன் அவர்களை கன்வீனராக நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

நன்றி

தங்களுடைய திருமணத்திற்கு வர இயலாமல் கடிதங்களும், தந்திகளும் அனுப்பி தங்களுக்கு வாழ்த்துக்கூறிய தோழர்களுக்குத் தனித்தனியே பதில் எழுத இயலாதிருப்பதால் இதன் மூலம் அவர்களுக்கு தம்பதிகள் தங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறார்கள்.

---

* *

நாகை திராவிடர் கழக நிர்வாக சபைக் கூட்டம் 30-4-45-ந் தேதி கூடியது. ஆண்டுவிழா பொதுக் கூட்டச் செலவுகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. புதிய ஆண்டுக்கு நிர்வாகஸ்தர்கள் ரூ. 3, 2, 1 வீதம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மேற்படி சந்தாக்களை 15-ந் தேதிக்குள் கொடுத்துவிடவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

* *

திருச்செங்கோடு திராவிடர் கழக உறுப்பினர் கூட்டம் 13-5-45ந் தேதி தோழர் ஆர். கே. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது இம்மாதக் கடைசிக்குள் டை கழகத்தின் ஆண்டுவிழாவை பெரியார், புரட்சிக்கவி, தளபதி அண்ணாதுரை, தோழர்கள் டி. பி. வேதாச்சலம், இரா. நெடுஞ்செழியன், ஜனார்த்தனம் ஆகியவர்களைக்கொண்டு நடத்துவதென்றும், புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் நிதிக்குப் பணம் வசூல்செய்து கொடுப்பதென்றும், 7-5-45ந் தேதி சென்னையில் கூடிய கூட்டம் ஜஸ்டிஸ்கட்சி கூட்டமாகாதென்றும் அதன் நடவடிக்கைகள் ஜஸ்டிஸ்கட்சி நடவடிக்கைகள் ஆகாதென்றும், ஜஸ்டிஸ்கட்சியாக அவர்களை சர்க்காரும் பொதுமக்களும் கருதக் கூடாதென்றும், தீர்மானிக்கப்பட்டது.

---


# 'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0, தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.


---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.